# நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” - பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்!

### தலைமைக் கழக அறிவிப்பு



2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அ.தி.மு.க. அரசின் பத்தாண்டு கால முறையற்ற நிர்வாகம், மக்களின் குறைகள், துன்பங்களை நேரடியாகக் கேட்டறிந்திட கழக முன்னணியினர் ‘விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்’ என்ற பரப்புரையில் பங்கேற்று அ.தி.மு.க.வை மக்கள் நிராகரிப்பதற்கான அடித்தளமிட்டனர்.

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் 2024- இல் கடந்த பத்தாண்டு காலத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டிற்கு இழைத்த அநீதிகளையும், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து தற்பொழுது நாடகமாடும் அடிமை அ.தி.மு.க.வின் துரோகங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், முதற்கட்டமாக, கழக முன்னணியினர் **“உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்”** என்ற தலைப்பில் நாடாளுமன்றத் தொகுதி வாரியான கூட்டங்களில் பங்கேற்று சிறப்புரையாற்றவுள்ளனர்.

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்க மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் குரலாக **பிப்ரவரி 16, 17 மற்றும் 18 ஆகிய நாட்களில்** கீழ்க்கண்டவாறு நடைபெறும் பரப்புரைக் கூட்டங்களை பொறுப்பு அமைச்சர்களுடன் இணைந்து, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதிகளைச் சார்ந்த மாவட்ட நிர்வாகிகள், சார்பு அணியினர், பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், கிளைச்செயலாளர்கள், பூத் கமிட்டியினர் ஆகியோர் பங்கேற்கும் பிரம்மாண்ட கூட்டங்களாக நடத்திட வேண்டும்.

**நாள் : 18.02.2024 (ஞாயிற்றுக்கிழமை)**

| நாடாளுமன்றத் தொகுதி | | சிறப்புரை |
|---|---|---|
| திருவள்ளூர் | - | மாண்புமிகு பொதுச்செயலாளர் **துரைமுருகன்** |
| தஞ்சாவூர் | - | கழகப் பொருளாளர் **டி.ஆர்.பாலு**, எம்.பி., |
| பெரம்பலூர் | - | முனைவர் **க.பொன்முடி** |
| கரூர் | - | திரு. **ஆ.இராசா**, எம்.பி., |
| புதுச்சேரி | - | திரு. **ஆர்.எஸ்.பாரதி** |
| பொள்ளாச்சி | - | திரு. திருச்சி சிவா, எம்.பி., |
| காஞ்சிபுரம் | - | மாண்புமிகு எ.வ.வேலு |
| தருமபுரி | - | திரு. எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி., |
| நாகப்பட்டினம் | - | மாண்புமிகு எஸ்.எஸ். சிவசங்கர் |
| தேனி | - | திரு. பொன்.முத்துராமலிங்கம் |
| நீலகிரி | - | திரு. திண்டுக்கல் ஐ.லியோனி |
| தென்காசி | - | முனைவர் சபாபதிமோகன் |
| சேலம் | - | திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., |
| ஆரணி | - | மாண்புமிகு முனைவர் கோவி. செழியன் |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



வேலூர் நேதாஜி விளையாட்டு மைதானத்தில் புத்தக திருவிழாவை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தொடங்கி வைத்தார். அருகில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன்எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை! அமைச்சர் துரைமுருகன் - முன்னணியினர் வாழ்த்துரை !

# எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி இல்ல மணவிழா வரவேற்பு !

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது !

*திருவள்ளூர், பிப்.18-*

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், எல்லாபுரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் - தலைமைச் செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி - ஸ்ரீலதா மூர்த்தி ஆகியோரின் புதல்வி எம்.ஸ்வேதாவிற்கும், ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம், ஆயிரால மண்டலம், கவிகிரிப்பள்ளி கே.சந்திர சேகர நாயுடு - கே.பார்வதி தேவி ஆகியோரின் புதல்வர் கே.நிதின் தேஜிக்கும் மணவிழா வரவேற்பு இன்று (18.2.2024-ஞாயிறு) மாலை 6.30 மணியளவில் வானகரம், அடையாளம் பட்டு எல்.பி.ஆர். கார்டன் ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பிற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று மணமக்களை வாழ்த்துகிறார். கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி, மாவட்டச் செயலாளர் டி.ஜெ. கோவிந்த்ராஜன் எம்.எல்.ஏ., ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. மற்றும் இ.ஏ.பி.சிவாஜி, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., க.சுந்தரம், மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., வி.ஜி. ராஜேந்திரன் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், இ.ஜி. சுகவனம், திருத்தணி எம்.பூபதி, சி.எச்.சேகர், கே.வி.ஜி. உமா மகேஸ்வரி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் அமைச்சர் துரைமுருகன், டி.ஆர்.பாலு எம்.பி. அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ. பெரியசாமி மற்றும் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர்கள் எ.வ.வேலு, பி.மூர்த்தி, பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யா மொழி, மா.சுப்பிரமணியன், தா.மோ. அன்பரசன், கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மு.பெ. சாமிநாதன், செஞ்சி மஸ்தான், எஸ்.எஸ்.சிவசங்கரன், டி.ஆர்.பி.ராஜா, சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அமைச்சர்கள் சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, சிவ.வீ.மெய்யநாதன், அரசுக் கொறடா கோவி செழியன், ஏ.கே.எஸ்.விஜயன், அமைச்சர்கள் அனிதா ராதா கிருஷ்ணன், சி.வெ. கணேசன்,

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, அறிவாலயம் ஆர்.பத்மநாபன், பூச்சி முருகன், துறைமுகம் காஜா, நே.சிற்றரசு, ஏ.பி.நந்தகுமார், க.தேவராஜ், ஒய்.பிரகாஷ், தடங்கம் பெ.சுப்பிரமணி, டி.எம்.செல்வகணபதி, இரா.இராஜேந்திரன், எஸ். ஆர்.சிவலிங்கம், எஸ். கல்யாணசுந்தரம், கே.ஆர். என்.ராஜேஷ்குமார், மதுரா எஸ்.எம்.செந்தில், வசந்தம் கார்த்திகேயன், துரை சந்திர சேகர், காடுவெட்டி நா. தியாகராஜன், சேடப்பட்டி மணிமாறன், கோ.தளபதி, என்.கௌதமன், துரை.சந்திரசேகர், க.சுந்தர், ஐ.பி.செந்தில்குமார், இ.ராஜா, நிவேதா முருகன், டி.மதியழகன்,

திருச்சி என்.சிவா, தயாநிதி மாறன், எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், எம்.எம்.அப்துல்லா, டாக்டர் கலாநிதி வீராசாமி, இரா.கிரிராஜன், திருவிடைமருதூர் ராமலிங்கம், என்.ஆர்.இளங்கோ, பி.வில்சன், துரை. கதிர் ஆனந்த், பொன்.கௌதம சிகாமணி, டி.ஜெயக்குமார், எஸ்.ஆர்.பார்த்திபன் மற்றும் பலர் வாழ்த்துகின்றனர்.




